ந.க.எண்.ஜி2/10194/2019
நாள்: 29.05.2019

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர் மாவட்டம், வேலூர் - 9.

## சுற்றறிக்கை

பொருள்: சான்றுகள் - பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினருக்கான குடும்ப வருமானம் (ம) சொத்து சான்று வழங்குவது – வழிகாட்டுதல்கள் தொடர்பாக.

பார்வை: கூடுதல் தலைமை செயலர் (ம) வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.4/2019 நாள்:04.05.2019 மற்றும் நேர்முக கடித எண்.ஆர்ஏ 5(3)/40521/2017 நாள்: 08.05.2019

**************

2019 ஆண்டைய இந்திய அரசியலமைப்பு திருத்த சட்டம் 103 ன்படி இந்திய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள பிரிவு 15(6) மற்றும் 16(6) ஆகியவை மூலம் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையிலுள்ள பொதுப்பிரிவினரும் முன்னுரிமை அடிப்படையில் இடஒதுக்கீட்டின் மூலம் பயன்பெறும் வகையில் 10 சதவீதம் இடஒதுக்கீடு வழங்க சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி ஏற்கனவே இந்திய அரசியலமைப்பு சட்ட இடஒதுக்கீட்டால் கவரப்படும் பிரிவினர்களான பட்டியலினத்தவர்(SC), பட்டியலின பழங்குடியினர்(ST), மற்றும் சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர்(OBC) ஆகியோர் அல்லாத, பொதுப்பிரிவில் இடம்பெற்றுள்ளோரில், பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு மத்திய அரசின் கல்விநிறுவனங்களில் சேர்வதற்கும் மற்றும் மத்திய அரசுப்பணிகள் பெறுவதற்கும் 10 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கான வருமானம் மற்றும் சொத்து சான்று வழங்குவது தொடர்பாக பார்வையில் காணும் சுற்றறிக்கையின் மூலம் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது.

**பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கான தகுதிகள்**

இந்தியஅரசின் ஆணைப்படி தற்போது நடைமுறையிலுள்ள இடஒதுக்கீட்டால் கவரப்படும் பிரிவினர்களான,

1. பட்டியலினத்தவர்(SC)
2. பட்டியலின பழங்குடியினர்(ST)
3. சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர்(OBC)

ஆகியோர் அல்லாத மற்றும் ரு.8லட்சத்திற்கு குறைவாக குடும்ப ஆண்டு வருமானம் கொண்டவர்கள், பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கான இடஒதுக்கீட்டின் பலன்களை பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

மேலும், பின்வரும் குடும்ப சொத்துக்களைக் கொண்டவர்கள் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினராக கருத இயலாது.

1. ஐந்து ஏக்கர் மற்றும் அதற்கு அதிகமாக விவசாய நிலத்தை உடையவர்கள்

2. 1000 சதுரஅடி மற்றும் அதற்கு அதிகமாக சொந்த வீடு உடையவர்கள்

3. நகராட்சி பகுதிகளில் 900 சதுரஅடி (100 சதுர யார்டுகள்) மற்றும் அதற்கு அதிகமாக வீட்டுமனை உடையவர்கள்

4. நகராட்சி அல்லாத பகுதிகளில் 1800 சதுரஅடி (200 சதுர யார்டுகள்) மற்றும் அதற்கு அதிகமாக வீட்டுமனை உடையவர்கள்

<u>குடும்பம் என்பதற்கான வரையறை</u>

பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கான இடஒதுக்கீடு பெறுபவருக்கான குடும்பம் என்பது இடஒதுக்கீடு கோருபவர், அவரது பெற்றோர், 18 வயதிற்கு உட்பட்ட சகோதர/சகோதரிகள், மனைவி/கணவர், மற்றும் 18 வயதிற்கு உட்பட்ட மகன்/மகள் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கான குடும்ப வருமானம் (ம) சொத்து சான்று வழங்க குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஈட்டுகின்ற அனைத்து விதமான வருமானம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது

1. ஊதியம்
2. விவசாயம்
3. வணிகம்
4. தொழில்கள் மூலம் பெறும் வருமானம்
5. இதர வருமானம்

ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். மேலும், மேற்படி வருமானம் <u>மனுதாரரால் விண்ணப்பிக்கப்பட்ட ஆண்டிற்கு முந்தைய நிதி ஆண்டின் வருமானமாக</u> இருக்கவேண்டும்.

மனுதாரரின் குடும்ப வருமானம் (ம) சொத்து சான்றானது மேற்கூறிய வரையறைகளின்படி மனுதாரர் வசிக்கும் எல்லைக்குட்பட்ட வட்டாட்சியரால் இணைப்பு III மற்றும் IV -ல் உள்ள படிவத்தில் அளிக்கப்பட வேண்டும். வேறு படிவத்தில் வழங்கப்படும் சான்றானது செல்லத்தக்கதல்ல. மேற்படி சான்று வழங்கும் வட்டாட்சியர், அரசாணை எண்.1509 வருவாய்த்துறை நாள்: 27.11.1991 -ன்படி வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி மனுதாரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தையும் கூராய்வு செய்து சான்றளிக்க வேண்டும்.

ஒரு கிராமம்/நகரத்தில் வசிக்கும் மனுதாரரின் குடும்ப உறுப்பினர்கள் பெயரிலுள்ள சொத்துக்கள், கிராம நிர்வாக அலுவலர்களால் சரிபார்க்கப்பட வேண்டும். அவ்வாறு சரிபார்க்கப்படும்போது கிராம கணக்குகளை ஆராய்வதுடன், உள்ளூர் விசாரணையும் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் வருவாய் ஆய்வாளர் மற்றும் துணை வட்டாட்சியர் நிலையிலும் கூராய்வு மற்றும் விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மனுதாரரால் வழங்கப்படும் விண்ணப்பமானது இணைப்பு I –ல் கண்ட படிவத்தில் விண்ணப்பிக்கப்படவேண்டும். அவ்விண்ணப்பத்துடன் இணைப்பு II –ல் கண்ட படிவத்தில் சுயஉறுதிமொழிப்பத்திரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி உறுதிமொழிப்பத்திரத்தில் அளிக்கப்படும் விவரங்களின் உண்மைத்தன்மையை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு, சான்று உறுதி வழங்கும் வழக்கறிஞரால் (Notary Public) அங்கீகரிக்கப்பட வேண்டும்.

பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கான குடும்ப வருமானம் (ம) சொத்து சான்றானது வட்டாட்சியரால் வழங்கப்பட்டவுடன், அதன் விவரத்தினை மாவட்ட இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்திடும் பொருட்டு, சம்பந்தப்பட் வட்டாட்சியரால் பிரதி மாதம் 3 ஆம் தேதிக்குள் காலமுறை அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

எனவே, வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து கோட்டாட்சியர்களும் மற்றும் வட்டாட்சியர்களும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு வருமானம் (ம) சொத்து சான்று வழங்குவதற்கான மேற்படி நெறிமுறைகள் அனைத்தையும் பின்பற்றிட தங்களது சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மேற்படி சுற்றறிக்கை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு: படிவம் I,II,III,IV

மாவட்ட ஆட்சியருக்காக
வேலூர்.

<u>பெறுநர்</u>

1. அனைத்து சார்ஆட்சியர்கள்
2. அனைத்து வட்டாட்சியர்கள்
3. ஜி2 – இருப்புக்கோப்பு

<u>நகல்</u>

கூடுதல் தலைமை செயலர் (ம) வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

## ANNEXURE – 1

## APPLICATION FORMAT

From

………………………

…………………………

……………………………

To

The Tahsildar,
………………….. Taluk,
…………………….. District

Sir / Madam,

I am residing in the above address. I request income and asset certificate to claim reservation under Economically Weaker Section category I belong to the ……………… caste which is not recognized as a Scheduled Caste / Scheduled Tribe and Other Backward Classes (Central List). Gross Annual Income of my family during the financial year ending 31st March …….. is below Rs. 8 lakhs:

My family does not own or possesses any of the following assets

i. 5 acres of Agricultural Land and above;

ii. Residential flat of 1000 sq. ft and above;

iii. Residential plot of 100 sq. yards and above in notified municipalities;

iv. Residential plot of 200sq. yards and above in areas other than the notified municipalities.

I enclose the prescribed Sworn Affidavit in Bond Paper.

I request you to issue Income and Asset Certificate to claim reservation under Economically Weaker Section category

Yours faithfully,

…………………

Encl:
1. Family card
2. Passport size photo -2
3. All other enclosure mentioned in sworn affidavit.

## ANNEXURE II

**AFFIDAVIT FILED BY Thiru / Tmt................................ S/o, W/o, D/o .................................. FOR GETTING THE INCOME AND ASSET CERTIFICATE FOR ECONOMICALLY WEAKER SECTION**

I ............................... S/o, W/o, D/o .................................. declare that I am a resident of .......................... village / street / Taluk .............................. District ................ in the State of Tamil Nadu and belong to ................. caste which is not recognized as a Scheduled Caste / Scheduled Tribe and Other Backward Classes (Central List).

2) The details of members of my family, their annual income (including self) during the financial year ending 31st March ........ are as follows:

Family:- It will include person who seeks benefit of reservation, his/her parents and siblings below the age of 18 years also spouse and children below age of 18 years.

| **Sl. No** | **Name of the individual and family members** | **Relationship** | **Source of Income** | | | | | **Total Income** |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Salary/ Pension* | Profession/ Business** | Agriculture | Rental | Others | |
| 1. | | Self | | | | | | |
| 2. | | | | | | | | |
| 3. | | | | | | | | |

3) The details of the properties held by me and my family members are as follows:

| **Sl. No** | **Name of the individual and family members** | **Relationship** | Names of the Villages/ Municipalities where properties is held | Survey No./ Door No. /Street No. | **Nature of the Property** | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | House site Extent | Agricultural land Extent |
| 1. | | Self | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |

4) I certify that the above said particulars are true to the best of my knowledge and belief and eligible to be considered for posts reserved for Economically Weaker Sections. In the event of any information being found false or incorrect, or in eligibility being detected before or after the selection, I understand that my candidature / appointment is liable to be cancelled and I shall be liable to such further action as may be provided under the law and / or Rules.

**Signature of the Applicant**

*** Salary Certificate / PPO copy to be attached**
**** TIN Number and the Trade**
**Note: Copy of family card should also be attested.**

## Annexure – III

**Government of ...........**
**(Name & Address of the authority issuing the certificate)**

**INCOME & ASSEST CERTIFICATE TO BE PRODUCED BY ECONOMICALLY WEAKER SECTIONS.**

**Certificate No..........** **Date ....................**

**VALID FOR THE YEAR ............**

**This is to certify that Shri/Smt/Kumari ..........................son/daughter/wife of ..................................permanent resident of .....................Village/Street ......................Post Office ...............District .............. in the State/Union Territory .....................Pin Code ................ whose photograph is attested below belongs to Economically Weaker Sections, since the gross annual Income* of his/her 'family*** is below Rs.8 lakh (Rupees Eight Lakh only) for the financial year ............ as evidenced from the Income certificate in the annexure IV. His/her family does not own or possess any of the following assets*******

i. **5 acres of agricultural land and above;**
ii. **Residential flat of 1000 sq.ft and above;**
iii. **Residential plot of 100 sq. yards and above in notified municipalities;**
iv. **Residential plot of 200 sq. yards and above in areas other than the notified municipalities.**

**2. Shri/Smt/Kumari .......................... belongs to the ...........caste which is not recognized as a Scheduled Caste, Scheduled Tribe and Other Backward Classes (Central List)**

**Signature with seal of Office...............**
**Name ............................**
**Designation .....................**

| Recent Passport Size attested photograph of the applicant |
|---|

***Note 1: Income covered all sources i.e. salary, agriculture, business, profession etc., as in annexure to this certificate.**

****Note 2: The term "Family" for this purpose include the person who seeks benefit of reservation, his/her parents/siblings below the age of 18 years as also his/her spouse and children below the age of 18 years.**

*****Note 3: The property held by a "Family" in different location or different places /cities have been clubbed while applying the land or property holding test to determine EWS status.**

## ANNEXURE IV

**Certificate No.** **Date:**

**Annexure to the Certificate of Income and Asset**

The details of income of family members of Thiru / Tmt / Selvi ..................................S/o, W/o, D/o ......................... during the financial year ending 31st March .................... are as follows:-

| Sl. No. | Name of the individual and family members | Relationship | | | Source of Income | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Salary / Pension | Profession / Business | Agriculture | | | | | Rental | | | Others | Income | Total Income |
| | | | | | Name of the village | Survey No | Classification | Extent | Income | Name of the village/ Town | Door No / Address | Income | | | |
| 1 | | Self | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | | | |

Signature of Tahsildar
(with seal)

Name and Designation